# இயேசு யார்?

பாடம் - 9

## திருச்சபையும், சபைப்பிரிவுகளும்

இன்று இயேசுவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் ஏன் பல சபைகளாகப் பிரிந்திருக்கின்றனர் என்று பலர் கேட்கிறார்கள். இப்பாடத்தில் சபை என்பது என்ன என்றும், அதைக்குறித்து நமது கடமை மற்றும் சபையின் வரலாறு ஆகியவற்றை அறிந்துகொள்வோம்.

சபை என்பது இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து ஒருமனதுடன், ஜெபத்திலும். வேண்டுதலிலும் தரித்திருக்கும்படி ஒன்று கூடுகிற விசுவாசிகளின் கூட்டமாகும்(அப் 1:14 - 2:1)

இயேசுகிறிஸ்துவே சபையின் தலைவராக இருக்கிறார் (எபே 1.23). எங்கே இரண்டுபேராவது அதற்கு மேற்பட்டவர்களாவது கூடி அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்களோ அங்கே அவர்கள் நடுவே இயேசு வந்து தலைவராக வீற்றிருக்கிறார். இதுவே ஸ்தல சபையாகும்.

பூமியிலே தேவனுக்கென்று பரிசுத்தமாய் வாழ்ந்துவரும் விசுவாசிகளின் கூட்டம் எங்கேயிருந்தாலும், அவர்கள் கிறிஸ்துவின் வருகையின்போது அவருடைய ராஜ்யத்தில் பங்கடையும்படி சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இந்த விசுவாசிகளின் கூட்டமே பரம சபையாகும். இந்தப் பரமசபையில் தற்போது பூமியிலிருக்கும் பல ஸ்தல சபைகளிலுமிருந்து வந்த விசுவாசிகள் இருப்பார்கள். நாங்கள் மட்டும்தான் இருப்போம் என்று எந்தக் கூட்டத்தினரும் பெருமைப்பட்டுக்கொள்ள முடியாது. மேலும் பரமசபையானது பல சந்ததிகளிலும் தோன்றி மறைந்த விசுவாசிகளால் ஆனது. இவர்கள் பல தேசங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இவர்கள் ஒருவரையொருவர் அறிந்திருக்க மாட்டார்கள். தேவன் ஒருவரே தம்முடையவர்களை அறிவார்.

நல்லதொரு விசுவாசி, இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெறுவதன்மூலம் சபையில் இணைகிறான். அவன் ஸ்தல சபைக் கூடுகைகளுக்குச் சென்று தேவனை ஆராதிக்கிறான். ஸ்தல சபையானது நிர்வாக ரீதியாக ஒரு போதகரையும் நற்சாட்சிபெற்ற கண்காணிகளையும், மூப்பர்களையும் கொண்டிருக்கும் ( 1 தீமோ 5.17).

<u>திருச்சபையின் பணிகள்:</u>

திருச்சபையானது குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒன்றுகூடி தேவனை ஆராதிக்கும். சபையானது ஏழை எளியவருக்கும், விதவைகளுக்கும் உதவிசெய்யும் ( 1 தீமோ 5.16) குறிப்பிட்ட இக்கட்டான சூழ்நிலைகளில் ஊக்கமாய் ஒருமனதுடன் தேவனைநோக்கி விண்ணப்பங்களை ஏறெடுக்கும்(அப் 12.5). அது தவிர உலக மக்கள் அனைவருக்காகவும் ஜெபங்களை ஏறெடுக்கும்(1 தீமோ 2.1). சபையானது தேவனைத் துதித்து, அவருக்குச் சாட்சியாக பல நற்பணிகளைச் செய்வதால், ஒவ்வொரு விசுவாசியும் அருகிலுள்ள ஏதேனும் ஒரு திருச்சபையில் இணைந்து இப்பணிகளைச் செய்வது சிறந்தது. விசுவாசிகளுக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பது, அவர்களில் வியாதிப்பட்டவர்களின் வீட்டுக்குச் சென்று எண்ணெபூசி ஜெபிப்பது, விசுவாசத்திலிருந்து வழி விலகிப் போகிறவர்களுக்கு நல்லாலோசனை வழங்கி தேவனுக்குள் நிலைநிறுத்துவது ஆகிய நற்பணிகளையும் சபையானது செய்யும். எல்லாவற்றையும்விட சுவிஷேசப் பணிகளுக்கு அடித்தளமாயிருந்து ஊழியர்களையும், தீர்க்கத்தரிசிகளையும் சபையானது உருவாக்கும். இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் தனக்குள் சேர்த்துக்கொண்டு அவர்களை கிறிஸ்துவின் நாள்வரை பரிசுத்தவான்களாகக் காத்துக்கொள்ள எல்லா வகையிலும் உதவும்.

**<u>ஆதி திருச்சபை :-</u>** இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் அவருடைய சீஷர்கள் பரிசுத்தஆவியானவரைப்பெறக் காத்திருந்து, பெற்றுக்கொண்டு, ஒருமனதுடன் ஜெபித்துக்கொண்டிருந்த முதல் கூட்டம்தான் ஆதி திருச்சபை. இந்தச் சபையில் இயேசுவின் சீஷர்களான பேதுரு, யோவான், யாக்கோபு, இயேசுவின் தாயாகிய மரியாளுக்குப் பிறந்த யாக்கோபு ஆகியோர் தலைவர்களாக மதிக்கப்பட்டார்கள் (கலா 2.9). துவக்கத்தில் 120 பேர்களாகக் கூடிய இந்தச் சபையில், முதல் நாளன்று நடந்த பிரசங்கத்தால் தேவன் 3000 விசுவாசிகளை இணைத்தார்(அப் 2.41.47). இந்தச் சபையில் இருந்த இயேசுவின் சீஷராகிய யாக்கோபு என்பவர், பிலாத்து என்ற மன்னனால் கொல்லப்பட்டு, முதல் இரத்தச் சாட்சியாக மரித்தார். அப்போது சபைக்கு எழுந்த துன்பங்களால் சிதறப்பட்டுப்போன விசுவாசிகள், தேவனுடைய வார்த்தையின்படியே யூதேயா, சமாரியா, கிரேக்கு, மற்றும் உலகின் ஐந்து கண்டங்களுக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். முதலாவது எருசலேமும், பின்னர்

அப்போதைய உலக நாடுகளின் தலைமையிடமான ரோமும் இத்திருச்சபையின் தலைமையிடங்களாக விளங்கின. ரோமில் இயேசுவின் சீஷர்களில் முதன்மையானவரான பேதுருவும் மற்ற சீசர்களும் வசித்த வீடு, இன்று வாடிகன் என்று சொல்லப்படும் போப்பாண்டவர் வசிக்கும் பகுதியில் உள்ளது. பிற்காலத்தில் ரோம அரசாங்கம் கிறிஸ்தவர்களை சிங்கங்களுக்கு இரையாகப்போடுவதும், பலவித சித்திரவதையால் கொல்லுவதுமாக இருந்தது.

4-ம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் என்ற ரோம அரசர் மேக்சிமஸ் என்ற தன் உறவினனோடு மெல்வின் பிரிட்ஜ் என்ற இடத்தில் யுத்தம்செய்யும்போது, அவன் செய்யும் பில்லிசூனியங்களை முறியடிப்பதற்காக இயேசுவின் அருளைவேண்டிப் பெற்றுக்கொண்டு, வெற்றிபெற்றார். அதனால் அவர் கிறிஸ்துவத்தை ஏற்றுக்கொண்டு, பல சீர்திருத்தநகளைச் செய்ய முற்பட்டார். அதன்படி ரோமாபுரி அனைத்துக் கிறிஸ்தவர்களின் தலைமையிடமாக விளங்கியது. மரித்த சீஷர்களின் எலும்புகள், கிறிஸ்தவர்களின் நினைவுப்பொருட்கள், வேதாகமத்தின் கைப்பிரதிகள் ஆகியவை அங்கு பாதுகாக்கப்பட்டன. உண்மையான மனமாற்றமின்றி, போரில் வெற்றிபெறுவதற்காக கிறிஸ்தவத்தை நாடிய இம்மன்னர், தனது மரணப்படுக்கையில்தான் உண்மையான மனமாற்றத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசனின் உண்மையான மனமாற்றம் ஏற்படுவதற்கு முன்பாகவே, கர்த்தருடைய ஆவியானவரால் நடத்தப்பட்ட கிறிஸ்துவ சபையின் தலைமை, அரசனின் கைப்பாவையாகிவிட்டது. அரசன் தமக்கு எதிராக இருந்தபோது செய்த தீமைகளைச் சகித்த சபையானது, அவன் தங்களோடு இணைந்துகொண்டபின் செய்த தீமைகளை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தது.

கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட மன்னர், ரோமாபுரியிலுள்ள அனைவரும் கிறிஸ்தவர்களாக மாறவேண்டுமெனக் கட்டளையிட்டார். காலங்காலமாக விக்கிரக ஆராதனையிலிருந்த அம்மக்கள் அரசனின் கட்டளையால் முழுமனதின்றி ஞானஸ்நானம் எடுத்து மதம் மாறினர். மனமாற்றமில்லாத இந்த மதமாற்றம் பல தீமைகளைக் கொண்டுவந்தது. அவர்கள் சூரியக் கடவுளின் திருவிழாவைக் கொண்டாடும் நாளில், கிறிஸ்தவர்களுக்கும் ஏதாவது பண்டிகை அவசியமென கோரிக்கை விடுத்தனர். அதை உணர்ந்த அரசனும் சபைத்தலைமையும், சூரியனின் பண்டிகை வருகிற அதே டிசம்பர் 25-ம் நாளை இயேசு பிறந்த கிறிஸ்துமஸ் தினமாக அறிவித்தது.

சர்வ வல்லமையுள்ள தேவன் தனக்குச் சமமாக படைக்கப்பட்ட எதுவும் இல்லாததால், விக்கிரங்களை உருவாக்கி தன்னை அவமானப்படுத்தக்கூடாது என்று ஆதிமுதல் கட்டளையிட்டிருக்கிறார். விக்கிரகங்களையே வணங்கி வந்தவர்களால், விக்கிரகமில்லாத சத்தியமுள்ள இந்த தேவனை வணங்குவது சிரமமாயிருந்தது. இதைத் தீர்ப்பதற்காக மத நல்லிணக்கம் என்ற பெயரில் அரசன் ஒரு அநியாயத்தைச்செய்ய, சபைத்தலைமை அதனை ஏற்றுக்கொண்டும்விட்டது.

அதாவது அக்கால ரோமர்கள், ஒரு தாயும் சேயுமான விக்கிரகத்தை கடவுளாக வணங்கிவந்தனர். கிறிஸ்தவர்களோ இயேசுவை மட்டும் வணங்கினர். அரசன் இவ்விருதிறத்தாருக்கும் இடைப்பாலமாக இயேசுவின் உலக அவதாரத்தில் அவருக்குத் தாயாக இருந்த மரியாள் என்ற பக்தியுள்ள பெண்ணை மாதா என்ற பெயரிலும், இயேசுவை அவளின் குழந்தையாகவும் சிலைவடித்து, அதனையே யாவரும் வணங்கும்படி உத்தரவிட்டான். விக்கிரக ஆராதனையில் ஊறிப்போனவர்களுக்கு இது மிகவும் எளிதாகப் போயிற்று. ஆனால் உண்மையாக தேவனை வணங்குவோர் இதனை ஏற்கவில்லை. ஏனெனில் உண்மைக் கிறிஸ்தவர்கள் இயேசு ஒருவரே தேவன் என்றும் அவருடைய பக்தர்கள் யாவரும் மரியாதைக்குரியவர்களேயன்றி, வணங்கப்படத்தக்கவர்கள் அல்ல என்றும் அறிந்திருந்தனர்.

மேலும் திரியேக தெய்வமானவர் மிகுந்த மகிமையும், சௌந்தரியமும், பிரகாசமும் உடையவர். விக்கிரக ஆராதனையோ பல நூற்றாண்டுகளாக அவரால் கண்டிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்ட அருவருப்பான செய்கையாகும். ஆனால் சபைத் தலைவரோ அரசனைச் சமாதானப்படுத்தவும், அநேகமாயிரம்பேர் எளிதாக கிறிஸ்துவை வணங்க ஆரம்பிப்பார்கள் என்ற எண்ணத்திலும் இதனை ஏற்றுக்கொண்டுவிட்டார். அதிலிருந்து உண்மையாய் தேவனை ஆராதிக்கும் கிறிஸ்தவர்களுக்கும், அரசனின் ஆதரவுபெற்ற தலைமைப் பீடத்திற்கும் பகைமை ஏற்பட்டு அதில் பல உண்மைக் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். உண்மைக் கிறிஸ்தவர்களை ஒருங்கிணைத்துச்செல்ல ஒரு சபை அமைப்பு இல்லாததாலும், போப்பாண்டவர் அரசனோடு இருந்துபெற்ற செல்வாக்கினாலும், உண்மைக் கிறிஸ்தவர்கள் பொய்க்குற்றச்சாட்டுக்களால் பலியாயினர். இந்த இருண்ட காலத்தில் போப்பின் தலைமையிலான இந்தச் சபையில் ஏற்பட்ட ஏராளமான ஊழியர்களின் ஒழுங்கீனங்கள்,வேதாகமத்திற்கு விரோதமான போதனைகள், விக்கிரக ஆராதனைகள் ஆகியவை படிப்படியாக மக்களிடையே வெறுப்பைக் கொண்டுவந்தது.

ஏழாம் நூற்றாண்டில் ஒழுக்கமற்று வாழ்ந்த ஒரு தனி மனிதனால் கிறிஸ்தவ வேதத்தின் பாதியை மட்டும் பல மாறுபாடுகளுடன் ஏற்றுக்கொள்ளும் மற்றொரு மதம் தோற்றுவிக்கப்பட்டது. எந்த தெய்வ நியதிக்கும் கட்டுப்படாமல், தனிமனிதனின் அக்கிரம போதனைகளையே தெய்வ வெளிப்பாடாகக் கரும் இம்மதமானது, வெறுப்புற்றிருக்கும் கிறிஸ்தவ மக்களைக் கவர்ந்துகொண்டு வந்தது. மக்களிடையே வேதாகமத்தின் கைப்பிரதிகள் எதுவும் இல்லாததால், போப்பும், சபை குருக்களும் சொல்பவை அப்படியே நம்பப்பட்டு, எதிர்கேள்வி கேட்பவர்கள் தண்டிக்கப்பட்டனர்.

16 ஆம் நூற்றாண்டில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதும் நிலமை மாறியது. தங்கள் வசதிக்காக வேதாகமத்தை அச்சிட்ட சபைத்தலைமையானது, அது மக்கள் கையில் கிடைப்பதைத் தடுக்க முயன்றும் முடியவில்லை. குறைந்த விலையில் வேதாகமத்தின் தெளிவான பிரதிகளையும், அதன் மொழிபெயர்ப்புக்களையும் பொதுமக்கள் பெற்று, சபையின் கட்டளையையும் மீறி வாசித்துப்பார்த்தனர். அதில் கூறப்பட்டுள்ளதற்கும் சபையின் நடைமுறைகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக்கண்டு திகைத்தனர். தாய்மொழியில் வேதாகமத்தை வெளியிடுவதைத் தடுக்கவும், தலைமையை எதிர்த்துக் கேள்விகள் கேட்பவரைக் கொல்லவும் போப் உத்தரவிட, அதனை பலநாட்டு அரசாங்கங்களும் நிறைவேற்றி, பலரைக் கொன்று குவித்தன. அச்சமயந்தான் குருக்களின் இழிசெயல்களை எதிர்த்துக் குரலேழுப்பிய மார்டின் லூதர் என்பவரின் தலைமையில் “கலகக்காரர்கள்” என்று அழைக்கப்படும் உண்மைக் கிறிஸ்தவர்களைக்கொண்ட பிராட்டஸ்டண்ட் சபை தோன்றியது.

உலகளாவிய தனிமனித தலைமையை விட்டு விலகி, ஒவ்வொரு நாட்டிலும் இந்த உண்மைக் கிறிஸ்தவர்கள் தனித்தனி சபை நிர்வாகங்களைத் தோற்றுவித்து கிறிஸ்தவத்துக்குத் தொண்டாற்றினர். இவர்களுக்கிடையே கருத்துவேறுபாடுகளைவிட பிராந்திய மொழி, கலாச்சார வேறுபாடுகளே புதிய சபைகள் தோன்றக் காரணமாயின. இச்சபைகளெல்லாம் விக்கிரக ஆராதனையை வெறுத்து உண்மையாக இயேசுவின் கட்டளைகளைப் போதித்து உலக முழுவதும் சுவிசேசம் பரவக்காரணமாய் விளங்குகின்றன. நிர்வாக அமைப்பில் இவை பிரிந்திருந்தாலும் இவை எல்லாமும் பரம சபையின் பகுதிகளானதால் இயேசுவே இவைகளின் தலைவராவார்.

இதைக்கண்ட போப் தலைமையிலான தாய்ச்சபை, தன்னைத் திருத்திக்கொள்ள பல குழுக்களை அமைத்து சீரமைப்புப் பணிகளைத் துவக்கியது. ஆயினும் தேவனுடைய கட்டளைக்கு விரோதமாக கன்னிமேரி, தேவதூதர்கள், புனிதர்கள் ஆகியவர்களுக்குச் சிலை அமைத்து மூடத்தனமாக வழிபடுவதை அவர்களால் திருத்திக்கொள்ள இயலாமல் இன்றும் தொடர்ந்து வருகிறது. இருப்பினும் ரோமன் கத்தோலிக்கப் பிரிவினரான தாய்ச்சபையிலும் விக்கிரக ஆராதனைக்கு விலகி தங்களைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளும் பலரை தேவன் தமது கிருபையினால் எழும்பப்பண்ணி வருகிறார். பின்னாட்களில் வேத வசனங்களுக்குப் பொருள்கூறுவதில் ஏற்பட்ட வேறுபாடுகளாலும், தனி மனிதர்களின் போட்டிகளாலும் புதிய சபைகள் தோன்றின. எந்த பாஷையையும் மற்றவர்கள்மீது திணிக்காமல், பற்பல பாஷைகளைப்பேசும் மக்களை தங்கள் தாய்மொழியிலேயே தேவனை ஆராதிக்கச்செய்து வழிநடத்த அந்தந்த இடங்களில் புதிய சபைகள் தோன்றுவது அவசியமாயிற்று.

ஒரு பெரிய நிறுவனமானது பிராந்திய அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் பொதுவான பொறுப்புகளுடன் தனிப்பொறுப்புகளும், சுதந்தரமும் வழங்கப்பட்டால் அது விரைவாக வளர்ச்சியடையும் என்பது நிர்வாக இயலின் உண்மையாகும். அதே போலத்தான் இயேசு என்னும் ஒரே கர்த்தரைத் தலைமையாகக் கொண்ட பிராந்திய சபைகளைத் தோற்றுவித்து, பரமசபையை விரைவாக வளர்க்க தேவன் சித்தம்கொண்டுள்ளார். வெளியரங்கமாக சபைப்பிரிவினைகளுக்கு பலவித காரணங்கள் நமக்குத் தோன்றினாலும், அவைகள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றன என்பதே உண்மையாகும்.சபைப்பிரிவுகள் ஒவ்வொன்றையும், பலவித ஊழியங்களையும் தேவனே தமது மகிமைக்காகத் தோற்றுவிக்கிறார். ஒவ்வொன்றும் இன்னின்ன பணிகளுக்காக தோற்றுவிக்கப்படுகிறது என்பதை தேவனே அறிவார். எனவே யாரும் மற்றவர்களைக் குற்றஞ்சாட்டத் தேவையில்லை.

தேவன் தம்முடையவர்களை இன்னாரென்று அறிவார். ஒவ்வொரு சபைகளிலும் இயேசுவை உத்தமமாய் பின்பற்றுகிறவர்கள் உண்டு. **மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெற்று, புதிய வாழ்க்கையில் நிலைத்திருக்கும் இந்த விசுவாசிகள் மட்டுமே பரலோகில் இணையப்போகும் பரம சபையாகும்.** இத்தச் சத்தியம் அனைத்துச் சபைகளாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். இந்தச் சத்தியத்தை மறுக்கும் எதுவும் திருச்சபையாகாது.

தற்போதுள்ள அனைத்து சபைகளுக்குள்ளும் சிதறியிருக்கும் இந்த **உண்மைக் கிறிஸ்தவர்களை மட்டும் மனதில் எண்ணிப்பார்த்தால்,** சபைப்பிரிவுகள் வேதனையளிக்காது.

எல்லா சபைகளிலும் தேவனுடைய ஆவியானவரைக்கொண்டு அற்புதங்களும், ஆவியின்

வரங்களும் செயல்படுவதைப் பார்க்கும்போது, தேவனே சபைப்பிரிவுகளையும் தமது மகிமைக்காகத் தோற்றுவிக்கிறார் என்ற உண்மை உறுதிப்படும். எப்படியாயினும் ஒவ்வொரு விசுவாசியும் ஏதாவது ஒரு சபையில் இணைந்து தேவமக்களோடு பணியாற்ற வேண்டும். அவரவர் கிரியைகளுக்கேற்ப தேவனுடைய வருகையில் பலன் கிடைக்குமேயன்றி, சபைப்பிரிவு யாரையும் காப்பாற்றாது.

தேவனுடைய பரம சபையின் அங்கம்வகிக்கும் நாம் அருகிலுள்ள எந்தச்சபையிலாகிலும் சேர்ந்து தேவனை ஆராதிப்போம்! சபையோடு இணைந்து அவருடைய பணிகளைச் செய்வோம்! நிறைவான பலனை அவருடைய வருகையில் பெற்றுக்கொள்வோம்! அதற்கேற்ற தேவனுடைய கிருபை நம்மோடிருப்பதாக. ஆமென்.

**கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்.**

1) **பரம திருச்சபை என்பது என்ன?**

2) **ரோமன் கத்தோலிக்க சபையானது (தாய் சபை) பிளவுபட முக்கிய காரணம் என்ன?**

3) **தாய் சபையைச் சீரமைக்கும் குழுக்கள் அமைத்தும், அவர்களால் திருத்திக்கொள்ள முடியாமல் தொடர்ந்து வரும் பாவம் என்ன?**

4) **அனைத்து சபைப் பிரிவுகளாலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரே சத்தியம் என்ன?**

5) **சபைப்பிரிவுகள் அவசியமென்று கருதுகிறீர்களா? உங்கள் பதிலுக்கான சில காரணங்களைக் கூறுங்கள்.**

அன்பார்ந்தவர்களே!

மேல்காணும் கேள்விகளுக்கான பதில்களை கீழ்காணும் அஞ்சல் அல்லது மின்னஞ்சலின் ஊடாக பதில் அளிக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.


அஞ்சல் முகவரி: **J.K.JESUDOSS CHELLADURAI**
**604 Third Building,**
**Shanthi Park Appartments**
**Jayanagar 9 th Block**
**Bangalore -69**
**India**

மின்னஞ்சல் முகவரி: **jkjesudoss@yahoo.com**


## பாடங்கள்:

- இயேசு யார்
- இயேசுவின் தெய்வீகம்
- இரட்சிப்பின் வழி
- ஜெபமும் வேதவாசிப்பும்
- சாத்தானும் மனிதனும்
- மோட்சமும் நரகமும்
- ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியானவரும்
- சுவிசேஷமும், விசுவாசியும்
- திருச்சபையும், சபைப்பிரிவுகளும்
- இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை


� copyright 1999-2017 TAMILCHRISTIAN.COM All rights reserved.